பொருளியல்

நிரம்பலை தீர்மானிக்கும் காரணிகளின் அடிப்படையில்
நிரம்பல் கோடு, நிரம்பல் விதி




e-தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி : 2.0 கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி மற்றும் சந்தைச் சமனிலையைப் பற்றி

தேர்ச்சி மட்டம் : 2.7
நிரம்பலை தீர்மானிக்கும் காரணிகளின் அடிப்படையில்
நிரம்பல் கோட்டையும் நிரம்பல் விதியையும் விளக்குவார்.


நிரம்பல்

குறிப்பிட்ட காலப்பபகுதியில் பொருளின் நிரம்பலை நிர்ணயிக்கின்ற விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத நிலையில் சந்தையில் குறித்த பொருளுக்கு நிலவும் பல்வேறுபட்ட விலைகளில் உற்பத்தியாளன் நிரம்பல் செய்ய விரும்பும் பல்வேறுபட்ட அளவுகள் நிரம்பல் எனப்படும்.



தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நிரம்பலைத் தீர்மானிக்கும்



தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நிறுவனம்

உள்ளீடுகளைப் பயன்படுத்தி பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு முன்வருகின்ற பொருளாதார அலகு நிறுவனம் ஆகும்.

நிரம்பலின் வகைகள்

01 நிறுவனம் ஒன்றின் நிரம்பல்

02 சந்தை நிரம்பல்

01 நிறுவன நிரம்பல்

குறித்த நிறுவனமொன்று பண்டத்தை குறிப்பிட்ட காலத்தினுள் வேறுபட்ட

02 சந்தை நிரம்பல்

சந்தை என்பது ஏதாவது பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் அனைத்து நிறுவனங்களின் மொத்தம் ஆகும்.
சந்தை நிரம்பல் என்பது குறித்த பண்டத்தை குறித்த காலத்தினுள் வழங்கும் அனைத்து நிறுவனங்களும் சந்தைப்படுத்துகின்ற அலகுகளின் மொத்த எண்ணிக்கை சந்தை நிரம்பல் எனப்படும்.

தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

குறிப்பு

சந்தையிலுள்ள வழங்குநர்களின் எண்ணிக்கையே நிறுவன நிரம்பலையும் சந்தை நிரம்பலையும் வேறுபடுத்தும் காரணியாகும்.

நிறுவன நிரம்பல் சார்பு

நிறுவன நிரம்பலுக்கும் அதனைத் தீர்மானிக்கின்ற காரணிகளுக்குமிடையிலான தொடர்பினை விளக்கும் சமன்பாடு நிறுவன நிரம்பல் சமன்பாடு / சார்பு ஆகும்.

$$Qs = f (P_x, C, T, Ex, G, O)$$

சந்தை நிரம்பல் சார்பு

சந்தை நிரம்பலுக்கும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளுக்குமிடையிலான தொடர்பினை விளக்கும் சமன்பாடு சந்தை நிரம்பல் சமன்பாடு ஆகும்.

$$Qs = f (P_x, C, T, Ex, G, N, O)$$

நிரம்பல் தொழிற்பாடு

நிரம்பலைத் தீர்மானிக்கும் எந்தவொரு காரணியினதும் மாற்றத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட பண்டமொன்றின் நிரம்பல் மாற்றமடையும் விதத்தை விளக்குவது நிரம்பல் தொழிற்பாடாகும்.

தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நிரம்பல் விதி

குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட பண்டத்தின் நிரம்பலை நிர்ணயிக்கின்ற விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறிப்பிட்ட பொருளின் விலைக்கும் தொகைக்குமிடையில் நேரான தொடர்பு காணப்படும் என்பதனைக் கூறுவது நிரம்பல் விதியாகும்.

நிரம்பல் விதி முன்வைக்கப்படும் முறைகள்

- நிரம்பல் அட்டவணை மூலம்
- நிரம்பல் வளையி மூலம்
- நிரம்பல் சமன்பாட்டின் மூலம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


நிரம்பல் அட்டவணை

குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட பொருளின் நிரம்பலை நிர்ணயிக்கின்ற விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத நிலையில் சந்தையில் பொருளுக்கு நிலவும் வெவ்வேறுபட்ட விலைகளில் நிரம்பலாளரினால் நிரம்பல் செய்ய விரும்பும் வெவ்வேறுபட்ட தொகைகளைக் காட்டும் அட்டவணை நிரம்பல் அட்டவணை ஆகும்.

விலை ரூபா	நிரம்பல் தொகை அலகுகள்
10	200
20	400
30	600
40	800

நிரம்பல் வளையி

குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட பொருளின் நிரம்பலை நிர்ணயிக்கின்ற விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத நிலையில் சந்தையில் பொருளுக்கு நிலவும் பல்வேறுபட்ட விலைகளில் நிரம்பலாளரினால் நிரம்பல் செய்ய விரும்பும் பல்வேறுபட்ட தொகைகளைக் காட்டும் வளையி நிரம்பல் வளையி ஆகும்.



தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நிரம்பல் சமன்பாடு

குறித்த காலப்பகுதியில் குறிப்பிட்ட பொருளின் நிரம்பலை நிர்ணயிக்கின்ற காரணிகளில் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத நிலையில் பொருளின் வெவ்வேறுபட்ட விலைகளில் நிரம்பலாளர்கள் நிரம்பல் செய்ய விரும்பும் வெவ்வேறுபட்ட தொகைகளையும் சமன்பாடு மூலம் காட்டுதல் நிரம்பல் சமன்பாடு ஆகும்.

நிரம்பல் சமன்பாடு பொருளின் விலைக்கும் அதன் நிரம்பல் தொகைக்கும் இடையில் உள்ள நேர்க் கணியத் தொடர்பினை விளக்குகின்றது.

$$Qs = a + bp$$

Qs : நிரம்பல் தொகை

a : பூச்சிய விலையில் நிரம்பல் தொகை / ஆகக்குறைந்த நிரம்பல் தொகை

b : நிரம்பல் வளைகோட்டின் தலைகீழ் சரிவு $b = \Delta Qs / \Delta p$

p : நிரம்பல் விலை

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணைக்குப் பொருத்தமான சமன்பாட்டினை பின்வருமாறு காட்டலாம்.

Qb = 200

b = Δ Qb / Δ P = 200/10 = 20

p = 10 ரூபா

a = ?

தரவுகளை Qs = a + bp எனும் சமன்பாட்டில் பிரதியிடுவோம்.

Qb = a + bp

200 = a + 20 * 10

200 = a + 200

a = 200 - 200

Qs = 20p

தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நிரம்பல் விதி தொழிற்படுவதற்கான

- அதிகரித்துச் செல்லும் எல்லைச் செலவு
- உற்பத்தியாளரின் இலாபம்

அதிகரித்துச் செல்லும்

நிறுவனமொன்று தனது உற்பத்தியை அதிகரித்துச் செல்லும் போது எல்லைச் செலவும் அதிகரித்தச் செல்கின்றது. அதிகரிக்கும் எல்லைச் செலவை ஈடு செய்யப் போதுமான விலை கிடைக்கும் போதே நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்கும். எனவே எல்லைச் செலவு அதிகரிக்கும் போது பொருளின் விலை அதிகரிக்க பொருளின் நிரம்பல் அளவும் அதிகரிக்கும். எனவே நிரம்பல் விதியினை நிர்ணயிப்பதாக

உற்பத்தியாளரின் இலாபம்

ஏனையவை மாறாத நிலையில் குறிப்பிட்ட பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது அப்பண்டத்திலிருந்து உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் இலாபம் அதிகரிக்கும். இலாப ஊக்குவிப்புக் காரணமாக விலை அதிகரிக்கும் போது உற்பத்தியாளர் நிரம்பலை அதிகரிப்பர். எனவே நிரம்பல் விதியின் நேர்க்கணிய தொழிற்பாட்டை

தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk